Deposition of witness

(Chapter XXII Code of Criminal Procedure)

முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கிருஷ்ணகிரி

| அமர்வு வழக்கு எண். | SC.No. 150 of 2022 | அரசு தரப்பு | அ.சா. 16 |
|---|---|---|---|
| பெயர் | திரு. மனோகரன் | எதிரி தரப்பு | |
| தகப்பனார் பெயர் | | வயது | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | | |

**Solemnly affirmed in accordance with the provision of Act 1969 of 07th day of February 2026**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் வட்டம், காரிமங்கலத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.06.2022 அன்று கிருஷ்ணகிரி காவல் துறையினர் மூலம் காரிமங்கலம் வட்டம் தெல்லஹள்ளி கிராமத்தை சேர்ந்த ராஜேந்திரன் மகன் பிரகாஷ்ராஜ் என்பவருக்கு சாதி சான்று கோரி வரப்பெற்ற மனுவின் பேரில் திண்டல் கிராம நிர்வாக அலுவலர், காரிமங்கலம் வருவாய் ஆய்வாளர், மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் விசாரணை செய்து மேற்படி நபருக்கு இந்து கொங்கு வேளாலர் சாதி சான்று 06.06.2022 அன்று என்னால் வழங்கப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் எதிரி பிரகாஷ்ராஜ்–க்கு வழங்கிய சாதி சான்றிதழ் அ.சா.ஆ.15 ஆக குறியிடப்படுகிறது. இது சம்மந்தமாக என்னை காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணை செய்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

எந்த தேதியில் என்னிடம் மனு கொடுத்தார்கள் என்றால் 05.06.2022 அன்று மனு கொடுத்தார். கிருஷ்ணகிரியில் எந்த காவல் நிலையத்திலிருந்து என்னிடம் மனு கொடுத்தார்கள் என்றால் சரியாக ஞாபகமில்லை. வெப்சைட் மூலமாக மனுதாக்கல் செய்தால் தான் நாங்கள் மேல் நடவடிக்கை

மேற்கொள்ளுவோம் என்றால் சரிதான். வெப்சைட்டில் மனுதாக்கல் செய்திருந்தால் அதன் மூலமாகவும் நாங்கள் ஆவணத்தை கொடுப்போம். ஆனால் காவல் நிலையத்தை சேர்ந்தவர்கள் வெப்சைட் மூலமாக மனுவினை கோரவில்லை என்றால் சரிதான். சாதி சான்றிதழை ஆன்லைன் மூலமாக தான் பதிவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடியும் என்றால் சரிதான். ஆன்லைன் மூலமாக பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்களை தான் ஏற்றுக்கொள்வோம், பதிவிறக்கம் செய்யப்படாத நீரமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal Sessions Judge,

Krishnagiri.